பக்கங்கள்: 08
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 20 வெள்ளிக்கிழமை 02.04.2021 கதிர் 16

## ஐஸ் போதைப்பொருளுடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

50 கிராம் ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

தெல்லிப்பழை, கட்டுவனைச் சேர்ந்த 49 வயதுடைய 3 பிள்ளைகளின் ☞2

## மனித நேய விடயங்களில் மிகத்துணிச்சலான ஆயர்

### முன்னாள் எம்.பி. சரவணபவன் இரங்கல்



மனிதநேயம் தொடர்பாக, ஓய்வுநிலை ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகையின் செயற்பாடுகள், அவர்கொண்டநேர்மையும் துணிச்சலும் அவரைத் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் மனித உரிமை ☞2

## வார்த்தைகளால் அல்லாமல் செயல்களால் வாழ்ந்து காட்டியவர் ஆயர் இராயப்பு ஜோசப்

### தமிழ் அரசியல் கைதிகள் இரங்கல்

மறைந்த மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் அருட்திரு கலாநிதி இராயப்பு ஜோசப் மனித நேயமும் பிறர் அன்பும் மிகுந்த பெருந்தகையானவர். தமிழ் அரசியல் கைதிகள் சிறைவைக்கப்பட்டிருக்கும் அத்தனை சிறைச்சாலைகளினதும் வாசல்களைத் தரிசித்து கைதிகளின் மனங்களில் தன்னம்பிக்கையை ஊட்டி, ஓர் அன்னையைப் போல் ஆற்றுப்படுத்தி, ஆசிர்வதித்து வந்த பெருந்தகையை நாம் சிரம் தாழ்த்தி அஞ்சலிக்கின்றோம்.

– இவ்வாறு சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர். ☞2

# அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இலங்கை ஊடகவியலாளர்கள்

### அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிக்கை

**இலங்கையில் ஊடகவியலாளர்களின் சுதந்திரம் பல வழிகளில் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளது என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

**இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-** ☞2

## மன்னார் ஆயர் இல்லத்தில் ஜோசப் ஆண்டகையின் உடல்

### யாழிலிருந்து பவனியாக எடுத்து வரப்பட்டது



(ந.லோகதயாளன்)

மன்னார் மறைமாவட்டத்தின் மறைந்த ஓய்வு நிலை ஆயர் கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகையின் உடல் இன்று யாழ்ப்பாணத்தில் இருந்து பவனியாக மன் ☞2

## யாழின் பிரபல ஆசிரியர் அன்பழகன் காலமானார்



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான தனியார் கல்வி நிலையங்களை யாழ்ப்பாணத்தில் நடத்திவந்த யாழ்ப்பாணத்தின்மிகப்பிரபலஆசிரியரான அன்பொளி கல்வியகத்தின் நிர்வாகி வேலுப்பிள்ளை அன்பழகன் இன்று காலை கொழும்பில் காலமானார்.

புற்றுநோய்த் தாக்கத்தால் உடல் நிலை பாதிப்புக்கு உள்ளாகியிருந்த அவர், கொழும்பில் தனியார் வைத்திய சாலை ஒன்றில் சேர்க்கப்பட்டிருந்த ☞2

## மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 கிலோ டைனமற் சிக்கியது





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.02

யாழ்., மண்டைதீவுக்கு அண்மையிலுள்ள குதிரைப் பிட்டியில் 10 கிலோ கிராம் டைனமற்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கடற்படையினரால் கைப் பற்றப்பட்டுள்ளன.

குறித்த டைனமற்கள் ஒரு பிளாஸ்ரிக் கான் ஒன்றில் நூதனமாக மறைத்து வைக்கப்பட்ட நிலையில் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

10 கிலோ எடை கொண்ட இந்த டைனமற் வெடி மருந்துகள், தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைமைக்குப் பயன்படுத்தும்நோக்கில் இப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. ☞2

## வீடொன்றின் சுவாமி அறையில் புதையல் தேடி அகழ்வு நடந்ததா?

### யாழ். பொலிஸார் விசாரணை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நல்லூர் சங்கிலியன் வீதியில்வீடொன்றின்சுவாமி அறையில்புதையல் உள்ளமை தொடர்பில் அகழ்வுப் பணி இடம்பெற்றதா? என்று பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அந்த வீட்டில் இராணுவத்தினர் எனக் கூறிய சிலர் அகழ்வுப் பணியை முன்னெடுக்கின்றார் என நேற்று நண்பகல் பொலிஸ் அவசரப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

எனினும், அங்கு அகழ்வுப் பணியை முன்னெடுத்தோர் பொலிஸாரின் வருகை அறிந்து தப்பிச் சென்றினர்.

வீட்டின் உரிமையாளர் பொலிஸாருக்கு மாறுபட்ட தகவல்களை வழங்கியுள்ளார். அவர் தான்தான் சுவாமி அறையின் ☞2

## நல்லூரில் கத்திமுனையில் 9 பவுண் நகை கொள்ளை!





(ந.லோகதயாளன்)

யாழ்., நல்லூர் பகுதியில் தனித்திருந்த முதியவர்களைக் கத்தி முனையில் அச்சுறுத்தி இன்று அதிகாலை 9 பவுண் நகை மற்றும் பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

பருத்தித்துறை வீதியில் இல. 343, நல்லூரில் உள்ள வீட்டிலேயே இந்தத் துணிகரக் கொள்ளை இடம் பெற்றுள்ளது.

வீட்டின் சமையலறை யன்னலைப் பிரித்து அதன் உள்ளே இருந்தகம்பிநெற்றையும்உடைத்து சமையலறைக்குள் உட்புகுந்த கொள்ளையன் சமையல் அறையின் கதவையும் உடைத்து ☞2

## மாகாண சபைத் தேர்தலுக்கு எதிராக ஆளும் தரப்பு உறுப்பினர்கள் வழக்கு

### அமைச்சர் காமினி லொக்குகே தகவல்



மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆளும் தரப்பின்ஒருசிலஉறுப்பினர்கள் எல்லை நிர்ணய விவகாரம், தேர்தல் முறைமை உள்ளிட்ட காரணிகளை முன்னிலைப்படுத்தி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர். எனினும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் பெரும்பாலானோர் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த இணக்கம் தெரிவித்துள்ளனர்.

– இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த அமைச் ☞2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வார்த்தைகளால் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அரசியல் கைதிகள் தங்கள் பெற்றோர், உறவினர்கள் ஊடாக அனுப்பி வைத்துள்ள இரங்கல் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

உண்மையான யேசுவின் சீடராக வார்த்தைகளால் அல்லாமல் செயல்களால் வாழ்ந்து காட்டியவர் மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் அருட்திரு கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகை.

அன்னார் தனது 80 ஆவது அகவையில் ஆண்டவர் கட்டளையின் பிரகாரம் சிந்திப்பதை நிறுத்தி நிரந்தர ஓய்வுக்குள் தன்னை ஒப்படைத்துக் கொண்டுள்ளார்.

'நீங்கள் மற்றவர்களுக்கு செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை நான் அறிந்து கொள்வேன்' என்ற யேசுபிரானின் அருள்வாக்கிற்கு வடிவம் கொடுத்து ஒடுக்கப்பட்டவர்களினதும் திக்கற்றவர்களினதும் உண்மைக் குரலாகத் தேசம் தாண்டி ஒலித்த ஒரு தமிழ்ப் பற்றாளரை இன்று தமிழ் உலகம் இழந்து துயருற்று நிற்கின்றது.

வேடமணிந்து கோஷமிட்டு, முதன்மை இருக்கைகளைத் தம்வசப்படுத்தி மாலை மரியாதைகளுடன் வலம் வருகின்ற வெற்றுச் சமூகப் பற்றாளர்களைப் போலன்றி, சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள ஆழமான தொடர்பை வெளிப்படுத்தி, நீதி நேர்மைக்காகத் துணிவோடு போராடிய அறப்போராளியாக தன் அடையாளத்தைப் பதித்து விட்டுச் சென்றிருக்கின்றார் ஆயர் பெருந்தகை. 'பொதுப்பார்வைக்குக் காட்சிப்படுத்தும் எந்தவொரு செயல்களிலும் சாட்சியம் இருப்பதில்லை.

விளம்பரமில்லா நற்காரியங்களே ஆண்டவன் சந்நிதானத்தில் என்றும் விலை மதிப்பானவை' என்பதற்கொப்ப சிறைக்கொட்டடிகளில் சிதைவுற்றுக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் அத்தியாவசிய விடயங்களில் அழையா விருந்தாளியாக தன் முனைப்பு கொண்டு பல நற்காரியங்களைச் செய்திருந்தார் ஆயர் அவர்கள்.

மனித நேயமும் பிறர் அன்பும் மிகுந்த பெருந்தகையான இவர், தமிழ் அரசியல் கைதிகள் சிறைவைக்கப்பட்டிருக்கும் அத்தனை சிறைச்சாலைகளினதும் வாசல்களைத் தரிசித்து கைதிகளின் மனங்களில் தன்னம்பிக்கையை ஊட்டி, ஓர் அன்னையைப் போல ஆற்றுப்படுத்தி, ஆசிர்வதித்து வந்திருந்தார்.

சிறைச்சுவர்களுக்குள் தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஏதேனும் அல்லல் நேர்ந்து விட்டதென்று அறியக் கிடைத்தால், உடனடியாகச் செயற்பட்டு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ஜயலத் ஜயவர்தனவுடன் தொடர்பு கொண்டு நிலைமை தொடர்பில் கவனமீட்ட என்றுமே பின் நின்றதில்லை.

அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரத்தில் அரச தலைவர், பிரதம நீதியரசர் முதற்கொண்டு, சட்டமா அதிபர், நீதி மற்றும் சட்டத்துறை சார் அதிகாரிகளையும் அரசியல் தலைவர்களையும் நேரடியாகச் சென்று சந்தித்துக் கலந்துரையாடி வந்திருந்தார். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார் என்றால் மிகையில்லை.

இவ்வாறு சொற்கோவைகளுக்குள் மாத்திரம் வரையறுத்துவிட முடியாத பரந்து விரிந்த செயல் எல்லையைக் கொண்டிருந்த அதி வணக்கத்துக்கு உரியவரின் அர்ப்பணிப்புகளை இட்டு நிரப்ப முடியாத இடைவெளி ஏற்பட்டுள்ளமையானது, பெரும் வருத்தத்திற்குரியதே.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று அலுத்து ஓயாது மக்கள் பணி செய்து வந்த மரியாதைக்குரிய மகானின் பேரிழப்பினால் துயரடைந்திருக்கின்ற அத்தனை மனித இதயங்களுக்கும் தமிழ் அரசியல் கைதிகளாகிய நாம் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் ஆண்டகை அவர்களின் ஆத்மா பரமபதமடைய சிறை அறைகளுக்குள் இருந்தபடி சிரம் தாழ்த்தி அஞ்சலிக்கின்றோம் - என்றுள்ளது.

## ஐஸ் போதைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தந்தையே இன்று அதிகாலை ஒரு மணியளவில் கைதுசெய்யப்பட்டார் என்று தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையிலேயே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான 50 கிராம் ஐஸ் போதைப்பொருள் சந்தேக நபரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது. அவர் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

## மனித நேய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீறலுக்கு எதிரான செயற்பாட்டாளராக இனம் காணவைத்தது.

- இவ்வாறு இரங்கல் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

இது குறித்து அவர் விடுத்த இரங்கல் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்பது வள்ளுவன் வாக்கு. அப்படித் தமது வாழ்வை முழுமையாக வாழ்ந்து முடித்து, தம்மை முழுமையாக அடையாளப்படுத்தி மறைந்துள்ளார் மன்னார் மாவட்ட ஓய்வு நிலை ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை.

ஆயர், தனது சேவைகளை மக்கள் தொண்டாகப் பெருமையுடன் ஏற்றுக் கொண்டதோடு அதனைத் தனது வாழ்வின் இலக்காகவும் ஆக்கிக் கொண்டவர். மனிதநேயம் தொடர்பான அவரது செயற்பாடுகளில் அவர் கொண்ட நேர்மையும் துணிச்சலும் அவரைத் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் மனித உரிமை மீறலுக்கு எதிரான செயற்பாட்டாளராக இனம் காணவைத்தது.

போர்க்காலத்தில் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் மனித உரிமை மீறல் செயற்பாடுகளைச் சர்வதேசத்துக்கு வெளிப்படுத்த அவர் எடுத்த முயற்சிகள் துணிச்சலானவை மட்டுமல்ல பல சவால்களை அழுத்தங்களை அவர் எதிர்கொள்ளவும் வைத்தன. இருந்தும் எந்த வகையிலும் அவர் மக்களுக்கான தன் பணிகளை நிறுத்தியதே கிடையாது.

இறுதி வரை அவர் எந்த அளவுக்குத் தன்னை ஒரு மனித நேயச் செயற்பாட்டாளராக நிலைநிறுத்திக் கொண்டாரோ அந்த அளவுக்குத் தமிழ்த் தேசிய உணர்வுள்ளவராகவும் இனம் காட்டிக்கொண்டார்.

அவரது மறைவு தமிழ் மக்களுக்கு ஒரு இறை தூதனை இழந்த துயரத்தைக் கொடுத்திருப்பது நிஜமே! - என்றுள்ளது.

## அச்சுறுத்தல்களுக்கு...

இலங்கையில் குறிப்பாக தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள சில ஊடகவியலாளர்கள் இவ்வாறான அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் சில அதிகாரிகள் அரச வாகனங்களைப் பயன்படுத்தி தம்மைக் கண்காணித்து வருகின்றனர் ஊடகவியலாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

போருடன் தொடர்புடைய நினைவேந்தல்கள் அல்லது நில ஆக்கிரமிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் போன்ற முக்கியமான நிகழ்வுகள் பற்றி அறிக்கையிடுவதைத் தவிர்க்கும்படி ஊடகவியலாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சில ஊடகவியலாளர்கள், நாட்டில் இடம்பெற்ற போர் மற்றும் போர்க்காலத்தில் காணாமல்போனவர்கள் தொடர்பில் அறிக்கையிடும்போது, பாதுகாப்புப் பிரிவினரின் அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்க வேண்டி ஏற்படுகின்றது - என்றுள்ளது.

மேற்படி சம்பவங்கள் குறித்த ஆதாரங்களையும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

## மன்னார் ஆயர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னாருக்கு எடுத்து வரப்பட்டது.

இதன்போது மக்கள் வீதியின் இரு பக்கமும் நின்று ஆயருக்கு அஞ்சலி செலுத்தினர்.

ஆயரின் உடல் தற்போது மன்னார் ஆயர் இல்லத்தில் உள்ள சிற்றாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

ஆயரின் உடலுக்கு அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் உட்பட மன்னார் மாவட்டத்தில் உள்ள பொது மக்களும் இணைந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

நாளை பிற்பகல் 3 மணியளவில் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் உடல் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. நாளைமறுதினம் பிற்பகல் 2 மணி வரை அங்கு அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மாலை 3 மணியளவில் பேராலயத்தில் இறுதி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இதன்போது இலங்கையின் அனைத்து ஆயர்களும் இணைந்து கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்கள்.

இதன்பின்னர் ஆயரின் உடல் பேராலயத்தில் அடக்கம் செய்யப்படவுள்ளது.

## யாழின் பிரபல ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அன்பொளி கல்வியகத்தில் கல்வி பயில்வதற்காக ஆண்டு தோறும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் திரண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அன்பொளி புலமைப்பரிசில் மாதிரி மற்றும் வழிகாட்டிகள் நாடளாவிய ரீதியில் தமிழ் மாணவர்கள் மத்தியில் கூடுதல் வரவேற்பைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மறைத்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த டைனமற்கள் கைப்பற்றப்பட்ட போதும் அவற்றை அங்கு மறைத்து வைத்திருந்தார்கள் என எவருமே கைது செய்யப்படவில்லை.

## வீடொன்றின் சுவாமி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலத்தைக் கொத்தியதாகவும் கூறியுள்ளார்.

அதையடுத்து சந்தேகம் கொண்ட பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## நல்லூரில் கத்தி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வண்ணம் வீட்டுக்குள் நுழைந்துள்ளான். இதன்போது வீட்டில் இருந்த மூதாட்டியின் கழுத்தில் கத்தியை வைத்து அச்சுறுத்தி சத்தம் எழுப்பாது வீட்டில் உள்ள நகை மற்றும் பணத்தை எடுத்துத் தருமாறும் கோரியுள்ளான்.

இதனால் பதற்றமடைந்த மூதாட்டி 3 பவுண் சங்கிலி, 2 பவுண் சோடிக் காப்பு, ஒரு பவுண் மோதிரம் என்பவற்றைக் கழட்டிக் கொடுத்தபோதும் காதில் இருந்த பெறுமதியான தோட்டையும் கழட்டுமாறு அச்சுறுத்தியுள்ளான். இதனால் மூதாட்டி தோட்டையும் கழட்டி வழங்கியுள்ளார். இவற்றைப் பெற்றுக்கொண்ட கொள்ளையன் ஒவ்வொரு அறையாகத் தேடுதலில் ஈடுபட்டுள்ளான்.

இதன்போது முதியவரின் கையில் இருந்த மோதிரத்தையும் அபகரித்த கொள்ளையன், வீட்டில் இருந்த 15 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்துள்ளான். இவை அனைத்தின்போதும் கொள்ளையன் முகத்தை மூடியவாறு கைக்குக் கையுறை அணிந்திருந்துள்ளான்.

இவ்வாறு கொள்ளையிட்ட கொள்ளையன் வீட்டின் அருகே நீண்டகாலமாகக் கைவிடப்பட்டுள்ள வீட்டின் வழியாகத் தப்பிச் சென்றுள்ளான்.

## மாகாண சபைத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரவைக் கூட்டத்தில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் மாகாண சபைத் தேர்தல் குறித்து முன்வைத்த யோசனை தொடர்பில் கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானம் எடுக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டாம் என மகா சங்கத்தினர் ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளார்கள்.

அதேவேளை, மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டாம் எனக் குறிப்பிட்டு ஆளும் தரப்பினர் ஒரு சில உறுப்பினர்கள் எல்லை நிர்ணயம், தேர்தல் முறைமை ஆகிய காரணிகளை முன்வைத்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளார்கள்.

ஆனால், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் பெரும்பாலான உறுப்பினர்கள் மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறைமையின் கீழ் நடத்த இணக்கம் தெரிவித்துள்ளார்கள்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் எழுந்துள்ள மாறுபட்ட கருத்துக்கள் அனைத்தும் முழுமையாக பரிசீலனை செய்யப்படும்.

உரிய காலத்தில் மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றிருந்தால் தற்போது இந்த நெருக்கடி நிலை தோற்றம் பெற்றிருக்காது. மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபையின் நிர்வாகம் முன்னெடுக்கப்படுவது ஜனநாயகக் கோட்பாட்டுக்கு முரணானது .

புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்னர் மாகாண சபைத் தேர்தல் குறித்து கவனம் செலுத்துமாறு மகா சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளார்கள்.

இந்த யோசனை தொடர்பில் ஜனாதிபதி மகாசங்கத்தினருடன் இடம்பெறும் சந்திப்பின்போது தீர்மானத்தை அறிவிப்பார். நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கு உண்டு.

மாகாண சபைத் தேர்தலை அரசியல் காரணிகளுக்காக பிற்போட வேண்டிய தேவை அரசுக்குக் கிடையாது. மாகாண சபைத் தேர்தல் இந்தத் தேர்தல் முறைமையில், எப்போது இடம்பெற்றாலும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி நாடளாவிய ரீதியில் பெற்றிபெறும் என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி
இலக்கம்-
076 443 8622

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சர்வமும் அரச திருவிளையாடல்

“பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவது” என்பார்கள்.

நாட்டில் பல விடயங்களில் ஆளும் தரப்பு இப்படித்தான் பண்ணிக் கொண்டிருக்கின்றது.

கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் உடல்களை நல்லடக்கம் செய்ய அனுமதிப்பதில்லை, தகனம் செய்வது என்று, சுகாதாரப் பிரச்சினையையும் பேரினவாத நோக்கில் அணுகி, முடிவெடுத்து, ஆளும் தரப்பு இனவாத அழிச்சாட்டியம் பண்ணியபோது நடுநிலையாளர்கள் மற்றும் முஸ்லிம்கள் தரப்பில் அந்த முடிவுக்கு எதிராகக் கடும் உணர்வெழுச்சி கிளம்பியது. அச்சமயம், அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாகவும், கொரோனா உயிரிழப்பு சடலங்களைத் தகனம் செய்யும் முடிவை மாற்றக் கூடாது என வலியுறுத்தியும், பேரினவாதிகள் ஆதரவுப் போராட்டங்களைப் பெரிய அளவில் தொடர்ந்து நடத்தினர். ஆனால் ஜெனிவாச் சிக்கல் கழுத்துக்கு வந்ததும் – பாகிஸ்தான் பிரதமர் கொழும்பு வந்து பேசியதும் – கொரோனாச் சாவு தொடர்பான மருத்துவ, சுகாதார உண்மைகள் எல்லாம் இலங்கை அரசின் நிபுணர்களுக்கு தலைகீழாகிவிட்டன. கொரோனாவினால் உயிரிழந்தோரைப் புதைக்கலாம் என்ற தீர்மானம் திடுதிப்பென எடுக்கப்பட்டது. அது வரை தகனம் மட்டுமே செய்ய வேண்டும் என்ற உத்தரவுக்கு ஆதரவாய், அட்டகாசம் பண்ணிக் கொண்டிருந்த பேரினவாதிகள் எல்லோரும் – துறவிகள் உட்பட – ‘கம்’ என்று அடங்கிப் போனார்கள். எதிர்ப்புக்குரல் எதுவும் கேட்கவில்லை. அது எப்படி? அரசு தீர்மானத்தை மாறி எடுத்ததும் அதுவரையான எதிர்ப்புக்குரல் திடீரென அடங்கியது எங்ஙனம்? ஒரு போராட்டம் இல்லை, ஓர் எதிர்ப்பு அறிக்கை இல்லை, ஓர் ஊடக மாநாடு இல்லை. எல்லாமே சத்தம் சந்தடியின்றி அடங்கி, புதிய முடிவுக்கு சம்மதம் கிடைக்கும் என்றால் அதுவரை காட்டப்பட்ட எதிர்ப்புக்குக் காரணம் யாது? எல்லோராலும் ஊகிக்கத்தக்க பின்புலம்தான் அது.

இப்போது மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலும் இதுதான் நடக்கின்றது.

மாகாண சபைத் தேர்தலை நடத்தவில்லை, மக்களின் வாக்குரிமையைப் பிரயோகிக்க விடாமல் தடுத்து விட்டனர் என்றெல்லாம் நல்லாட்சி அரசு மீது, குற்றம், குறை கூறிக் கொண்டிருப்போர் அதன் காரணமாகத் தாங்கள் தேர்தலை நடத்த விழைபவர்கள் போல காட்ட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

போதாக்குறைக்கு மாகாண சபைத் தேர்தல்களை உடனே நடத்தி, அதிகாரப் பகிர்வை செயற்படுத்துங்கள் என்று உலக அரங்கில் வைத்து இலங்கைக்கு இந்தியா அழுத்தம் திருத்தமாகச் சொல்லி விட்டது.

இதனால், அத்தேர்தலை நடத்த முயற்சி எடுப்பது போன்று பாவனை பண்ண வேண்டிய இக்கட்டு அரசுக்கு. இதே சமயம் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி, வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாகத்தைத் தமிழர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் கையளிக்கவும் ஆளும் தரப்பின் பேரினவாதிகளுக்கு விருப்பமில்லை.

பிறகென்ன? பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும் பணி ஆரம்பமாகி விட்டது.

மாகாண சபைத் தேர்தல் நடத்துவதில் ஈடுபாடு உள்ளது போல வெளிப்படைக்கு அரசு நடந்து கொள்ளும்.

அதே சமயம், பின் கதவால் அந்தத் தேர்தலை நடத்துவதற்கு, எதிரான நடவடிக்கைகளை தன்தொடர்பு இல்லாதவாறு காட்டிக் கொண்டு தீவிரமாக முன்னெடுக்கும் அதே அரசுத் தரப்பின் அரூபக் கரங்கள்.

இப்படி பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும் பணி அவர்களின் வழமையான பண்புதான்.

மாகாண சபைத் தேர்தல் நடக்கப் போவதாக ஜனாதிபதி கோட்டா தெரியப்படுத்தி விட்டார். அரச அதிகாரிகளையும் தனது கட்சிக்காரர்களையும் அதற்குத் தயாராகும் படி கூறி விட்டார். தேர்தலை நடத்துவதற்கான முறைமைகள் குறித்தும் ஆயத்தங்கள் குறித்தும் அமைச்சரவையில் கூட நடவடிக்கைகள் தொடங்கி விட்டன எனக் காட்டப்பட்டுள்ளது.

இதற்கிடையில் வழமை போல அந்தத் தேர்தலை நடத்தவே கூடாது என்ற பிடிவாதத்துடன் மகா சங்கத்தினர் களம் இறங்கியுள்ளனர். களம் இறங்கியுள்ளனரா, களமிறக்கப்பட்டுள்ளனரா என்பதை சாதாரண பொது மகனே ஊகிக்க முடியும்.

தெற்கில் மாகாண சபைத் தேர்தல் எதிர்ப்புப் பிரசாரம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. தடை உத்தரவு வாங்க நீதிமன்றுக்கும் போகப் போகின்றார்களாம்.

வடக்கு கிழக்கைப் பிரிப்பதற்கு நீதிமன்றத்தைப் பயன்படுத்தியமை போல, மாகாணத் தேர்தலை நடத்தாமல் இருக்கும் பேரினவாத முடிவுக்கும் நீதித்துறையே கொழுகொம்பாய்ப் போம், தன்னைத் தானே அது அம்மணப்படுத்திக் கொள்ளலாம்; அவமானப்படுத்திக் கொள்ளலாம். அப்படித்தானே நீதித்துறை இலங்கையில் உள்ளது...!

# நட்பு நாடுகள் பலவற்றை இலங்கை இழந்துவிட்டது!

## கரு ஜயசூரிய வேதனை



கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு ஆதரவளித்த நட்பு நாடுகளில் பெரும்பான்மையை நாங்கள் இழந்துவிட்டோம் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் கரு ஜெயசூரிய மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கடந்த காலத்தில் பல சந்தர்ப்பங்களில், இலங்கை தொடர்பாக மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானங்களில், பெரும்பான்மையினரின் நம்பிக்கையை இலங்கை வென்றெடுக்க முடிந்தது.

ஆனால் அப்போது ஆதரவளித்த பெரும்பான்மையான நாடுகள், தற்போது ஆதரவளிக்க விரும்பவில்லை.

இதற்கு முக்கிய காரணம், தற்போதைய அரசாங்கத்தால் பின்பற்றப்படும் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளாகும்.

இதேவேளை தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவர வாக்களித்த பெரும்பான்மையின மக்களின் ஒப்புதல் கூட இல்லாமல் நிறைவேற்றப்பட்ட 20 ஆவது திருத்தத்தின் காரணமாக இலங்கை, உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பலவீனமடைந்துள்ளது என்ற விடயம் ஜெனிவாவில் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டது. –என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனாத் தொற்று கட்டுப்பாட்டில் இல்லை!

## வைத்தியர் சுதத் சமரவீர தெரிவிப்பு



கொரோனா தொற்று முழுமையாக கட்டுப்படுத்தப்படவில்லை என்றாலும், நிலைமை ஒப்பீட்டளவில் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது என தலைமை தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் 800 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் பதிவு செய்யப்பட்ட நிலையில் தற்போது 200 பேர் மட்டுமே நாளாந்தம் அடையாளம் காணப்படுகின்றார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் நாட்டில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது வேண்டுமென்றே தற்கொலை செய்வதற்குச் சமம் என்றும் சுதத் சமரவீர சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், நாட்டில் சீரற்ற முறையில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். சோதனைகள் தொடர்கின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், பண்டிகைக் காலங்களில் முக்கிய இடங்களில் இருந்து வெளியேறும் மக்களுக்கு அன்டிஜென் சோதனைகளை நடத்தப்போவதாகவும் வைத்தியர் சுதத் சமரவீர குறிப்பிட்டார்.

# தலையணை சண்டையை தவிர்க்க கோருகின்றது சுகாதார அமைச்சு

கொரோனா வைரஸ் பரவும் அபாயத்தை கருத்திற்கொண்டு, தலையணை சண்டை, கயிறிழுத்தல் போன்ற புத்தாண்டு விளையாட்டுகளில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு சுகாதார அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை, இசை நிகழ்ச்சிகளை நடத்த வேண்டாம் என்றும் சுகாதார அமைச்சின் பொது சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் வைத்திய கலாநிதி சூசி பெரேரா தெரிவித்தார்.

ஆகவே, இவ்வாறான பெரிய அளவில் மக்கள் செல்லும் கூட்டங்களை தவிர்த்து வீட்டில் இருந்தே தமிழ் சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்களில் ஈடுபடுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கொரோனாத் தொற்று பரவக்கூடிய கூடிய ஆபத்தை ஏற்படுத்தும் எந்தவொரு விளையாட்டு அல்லது எந்தவிதமான நிகழ்வுகளை ஏற்பாடு செய்யவேண்டாம் என்றும் சுகாதார அமைச்சு பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

# நுவரெலியா பம்பரக்கலை தோட்டத்தில் தீ விபத்து; 3 வீடுகள் எரிந்து நாசம்



நுவரெலியா பம்பரக்கலை தோட்டத்தில் இன்று (வெள்ளிக்கிழமை) காலை ஏற்பட்ட திடீர் தீவிபத்தில் மூன்று வீடுகள் தீயால் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

இந்த மூன்று வீடுகளிலும் இருந்த 15 பேர் தற்காலிகமாக உறவினர்கள் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த தீ விபத்தின்போது, எவருக்கும் தீ காயங்கள் ஏற்படவில்லை என்பதோடு, பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், ஆவணங்கள், தங்க நகைகள், துணிகள் மற்றும் பாடப் புத்தகங்கள் என பெருமளவிலான பொருள்கள் தீக்கிரையாகியுள்ளன.

தீ ஏற்பட்ட போது வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிட்டனர் எனவும், அதன் பிறகு அயலவர்கள் ஓடி வந்து தீயை அணைக்க முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் பல மணி நேரத்துக்குப் பின்பு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இது தொடர்பாக நுவரெலியா பொலிஸ் நிலையத்துக்கு பிரதேசவாசிகளால் தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

அதன்பின் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தீ பரவலுக்கான காரணங்களைக் கண்டறிய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வாக்கு இயந்திர தேர்தல் முறையை எல்லா கட்சிகளும் எதிர்க்க வேண்டும்

## பிரியங்கா வேண்டுகோள்



அசாம் மாநிலத்தில் வேட்பாளர் ஒருவருடைய காரில் வாக்கு இயந்திரம் இருந்ததாக வீடியோ படத்துடன் சமூக வலைத்தளத்தில் தகவல்கள் பரவின.

இதுசம்பந்தமாக விசாரணை நடத்த வேண்டும் என்று தேர்தல் ஆணையகத்திக்கு காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தநிலையில் காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா டுவிட்டரில் ஒரு செய்தி வெளியிட்டுள்ளார். சமூக வலைத்தளத்தில் பரவி உள்ள வீடியோவும் அதில் இணைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தடவையும் தேர்தல் நடக்கும் போது இதுபோன்ற சம்பவம் நடந்து வருகின்றது. தற்போது வாக்கு இயந்திரம் இருந்ததாக கூறப்படும் கார் பா.ஜனதா வேட்பாளருடையதாக இருக்கலாம். அல்லது அவருடைய ஆதரவாளருடைய காராக இருக்கலாம்.

ஆனால் இதை மறுப்பார்கள். இதை வெளிப்படுத்திய நபரை பா.ஜனதாவின் ஊடகங்கள் திருப்பி குற்றம்சாட்டும். அவருக்கு தீங்கு இழைக்கப்படும்.

இதுபோல பல குற்றச்சாட்டுகள் ஆங்காங்கே பதிவானாலும் அவை குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்போதைய புகாரில் தேர்தல் ஆணையகம் தீர்க்கமாக செயல்பட வேண்டும்.

மேலும் வாக்கு இயந்திர தேர்தல் முறையை மறுபரிசீலனை செய்வது அவசியமாகிறது. அனைத்து தேசிய கட்சிகளும் எதிர்ப்பு தெரிவிப்புடன் வாக்கு இயந்திர முறையை மறுபரிசீலனை செய்வதற்கு வற்புறுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

– இவ்வாறு பிரியங்கா கூறியுள்ளார்.

# ரஜினிக்காக காத்திருக்கும் மகாராஷ்டிரா கிராம மக்கள்



நடிகர் ரஜினிகாந்தின் சொந்த ஊர், மகாராஷ்டிரா மாநிலம் புனேவில் இருந்து 60 கி.மீ. தொலைவில் உள்ள மாவடி கதேபதார் கிராமம் என்று கருதப்படுகிறது. அங்கு ரஜினியின் குடும்ப பெயரான ‘கெய்க்வாட்’ என்ற பெயர் கொண்ட பலர் வசித்து வருகிறார்கள். அந்த கிராமத்தினர், தங்கள் ஊருக்கு ரஜினியின் வருகையை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.

இதுகுறித்து அந்த கிராமத்தின் முன்னாள் பஞ்சாயத்து தலைவர் சதானந்த் ஜகதாப் கூறியதாவது:–

ரஜினியின் தாத்தா இந்த ஊரில் இருந்துதான் கர்நாடகத்துக்குச் சென்றார். ரஜினி குடும்பத்துக்கு இங்கு நிலமும் உள்ளது. அவர் இந்த மண்ணின் மைந்தர். சில ஆண்டுகளுக்கு முன்பு, புனே அருகே லோனோவாலாவில் அவர் ஒரு படப்பிடிப்புக்காக வந்திருந்தபோது அவரை நாங்கள் சந்தித்தோம். நாங்கள் இந்தியில் பேசியபோது, அவர் மராட்டியில் பேசுமாறு சொன்னார். அப்போது, தனது சொந்த கிராமமான மாவடி கதேபதாருக்கு ஒருநாள் வருவதாக உறுதி அளித்தார். அவர் தனது வாக்குறுதியை காப்பாற்றுவார் என்று நம்புகிறோம். அவருக்கு விருது கிடைத்ததை அறிந்து ஒட்டுமொத்த கிராமத்தினரும் பெரு மைப்படுகிறோம். – இவ்வாறு அவர் கூறினார்.

# காங்கிரஸ், இடதுசாரி கூட்டணிகள் வாரிசு அரசியலை ஊக்குவிக்கின்றன

## கேரளாவில் மோடி பிரசாரம்



கேரள மாநிலம் பத்தனம்திட்டாவில் நடைபெற்ற பிரசார பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொண்டு பா.ஜ.க. வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டினார். கூட்டத்தில் மோடி பேசியதாவது:–

மலர்களால் வரவேற்கப்பட வேண்டிய ஐயப்ப பக்தர்களை லத்திகளால் வரவேற்றனர். கேரளாவின் புனித பிம்பத்தை சிதைக்கும் வகையிலும், கலாச்சாரம் பின்தங்கியதாகவும் காட்ட எல்.டி.எப். முயற்சி செய்கிறது. சிறுபிள்ளைத் தனமான செயல்களால் புனித தலங்களின் உறுதியை குலைக்கும் வகையில் செயல்படுகிறார்கள்.

புறந்தள்ளப்பட்ட கொள்கையை வைத்துக்கொண்டு கலாச்சாரத்தை சிதைப்பதை அனுமதிக்க முடியாது. கேரளாவில் காங்கிரஸ், இடதுசாரி கூட்டணிகள் வாரிசு அரசியலை ஊக்குவிக்கின்றன.– இவ்வாறு அவர் பேசினார்.

# சச்சின் விரைந்து நலம்பெற விழைகிறேன்

## மு.க.ஸ்டாலின் டுவிட்



தலைசிறந்த கிரிக்கெட் வீரரான சச்சின் டெண்டுல்கர் கொரோனாத் தொற்றிலிருந்து விரைந்து நலம்பெற விழைவதாக, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள பெருந்தொற்று அலையினை விழிப்போடு எதிர்கொள்ளுமாறும் தடுப்பூசி எடுத்துக்கொள்ளுமாறும் நாட்டு மக்களை மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கொரோனாவால் பாதிப்பு

# சச்சின் டெண்டுல்கர் வைத்தியசாலையில்



கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டது. இது தொடர்பாக அவர் கடந்த 27 ஆம் திகதி தனது டுவிட்டரில் எனக்கு சிறிய அறிகுறியுடன் கொரோனா பாதிப்பு இருப்பது பரிசோதனையில் உறுதியானது.

இதனால் வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளேன். டாக்டர்கள் கூறிய அனைத்து விதி முறைகளையும் பின்பற்றி வருகிறேன் என்று தெரிவித்தார். மேலும் தனது குடும்பத்தினருக்குக் கொரோனா பாதிப்பு இல்லை என்றும் தெரிவித்தார்.

இதையடுத்து டெண்டுல்கர் தன்னை வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில் கொரோனா பாதிப்பு ஏற்பட்ட 6 நாட்களுக்கு பிறகு டெண்டுல்கர் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று டுவிட்டரில் கூறியிருப்பதாவது:–

உங்களின் வாழ்த்துக்களுக்கும், பிரார்த்தனைகளுக்கும் நன்றி. மருத்துவ ஆலோசனையின்படி முன்எச்சரிக்கையாக நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளேன். சில நாளகளில் வீடு திரும்புவேன் என்று நம்புகிறேன். அனைவரும் தங்களது நலனில் கவனம் செலுத்தி பாதுகாப்பாக இருங்கள் என்று கூறியுள்ளார்.

மேலும் 2011 ஆம் ஆண்டு உலக கோப்பையை வென்ற 10 ஆவது ஆண்டு தினத்தையொட்டி இந்தியர்களுக்கும் மற்றும் எனது அணியினருக்கும் வாழ்த்துக்கள் என்றும் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் ராய்ப்பூரில் நடந்த சாலை பாதுகாப்பு உலக தொடர் போட்டியில் டெண்டுல்கர் பங்கேற்று விளையாடினார். அதன்பின் அவருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டது. அதே போல் அவருடன் இந்திய லெஜண்ட்ஸ் அணியில் இடம் பெற்று இருந்த யூசுப் பதான், இர்பான்பதான், பத்ரிநாத் ஆகியோரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீரில் வீட்டினுள் பதுங்கி இருந்த 3 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை



காஷ்மீரில் உள்ள புல்வாமா மாவட்டம் கஹாபுராவில் நேற்று பாதுகாப்புப் படையினர் ரோந்து வந்தனர். அப்போது அங்கு மறைந்திருந்த பயங்கரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர்.

உடனே பாதுகாப்பு படையினர் எதிர் தாக்குதல் நடத்தினார்கள். மத்திய பாதுகாப்பு படையினர் மற்றும் உள்ளூர் பொலிஸார் அந்த இடத்துக்கு கூடுதலாக வரவழைக்கப்பட்டனர்.

அவர்களை கண்டதும் அருகில் இருந்த வீட்டுக்குள் பயங்கரவாதிகள் புகுந்தனர். அங்கிருந்தபடி தொடர்ந்து துப்பாக்கியால் சுட்டனர். பதிலுக்கு பாதுகாப்பு படையினரும் சுட்டனர். இரு தரப்புக்கும் இடையே நேற்று இரவில் இருந்து தொடர்ந்து சண்டை நடந்து வந்தது.

இன்று காலையிலும் சண்டை நீடித்தது. வீட்டுக்குள் 3 பயங்கரவாதிகள் பதுங்கி இருந்தனர். அவர்களை சுட்டு வீழ்த்த பாதுகாப்புப் படையினர் முழுமையாக சுற்றி வளைத்து தாக்கினார்கள். காலை 10 மணியளவில் 3 பயங்கரவாதிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்று நவ்கான் என்ற இடத்தில் பாரதிய ஜனதா தலைவருக்கு பாதுகாப்பில் இருந்த பொலிஸ்காரர் ஒருவரை பயங்கரவாதிகள் சுட்டுக்கொன்றனர்.

இதில் ஈடுபட்டவர்கள்தான் இவர்கள் என்று கருதப்படுகிறது. இந்த ஆண்டில் இதுவரை பொலிஸாருடன் நடந்த சண்டையில் 20 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். இப்போது மேலும் 3 பேர் கொல்லப்பட்டு இருக்கிறார்கள்.

பெரும்பாலும் ஷோபியான், புல்வாமா மாவட்டங்களில்தான் பயங்கரவாதிகளின் நடமாட்டம் அதிகமாக உள்ளது. எனவே அந்த மாவட்டங்களில் கூடுதல் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைவான் சுரங்கப்பாதையில் ரயில் விபத்து 36 பேர் உயிரிழப்பு: 40 அதிகமானோர் காயம்









தாய்வானில் இன்று வெள்ளிக்கிழமை சுரங்கப்பாதையில் சென்று கொண்டிருந்த பயணிகள் ரயில்விபத்துக்குள்ளானதில் 36 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 70 பேர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர்.

நான்கு தசாப்தங்களில் தீவின் மிக மோசமான ரயில் விபத்து இது எனவும் 40 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

பிரபலமான வருடாந்திர டோம்ப் ஸ்வீப்பிங் திருவிழா தொடங்கியுள்ளதால், பஸ்களும், ரயில்களும் பயணிகளால் நிரம்பி வழிகின்றன.

இந்த நிலையில், கிழக்கு தைவானில் சுரங்கப்பாதையில் எட்டு பெட்டிகள் இணைக்கப்பட்ட ரயில் நீண்ட வார இறுதி தொடக்கத்தில் பல சுற்றுலாப் பயணிகளையும், விடுமுறைக்காக வீட்டிற்குச் செல்லும் மக்களையும் ஏற்றிக்கொண்டு தைப்பேயில் இருந்து தைதுங்கிற்கு பயணித்த இந்த ரயில், கிழக்கு தாய்வானில் ஹுலியனுக்கு வடக்கே தண்டவாளத்தில் இருந்து விலகி விபத்துக்குள்ளாகியது என தீயணைப்புத் துறை தெரிவித்துள்ளது.

அதில் 350 இற்கும் அதிகமான பயணிகள் இருந்ததாகவும், ரயில் விபத்துக்குள்ளானதில் பலர் இறந்து விட்டதாவும் தாய்வான் ரயில்வே தெரிவித்துள்ளது.

## அமெரிக்காவில் வீணாகிய தடுப்பு மருந்து ஒன்றாக கலந்த வெவ்வேறு மருந்துகள்



அமெரிக்காவின் மேரிலாண்ட் மாநிலத்தில் நடந்த தனிமனித தவறால் ஒன்றரை கோடி டோஸ்கள் கொரோனாத் தடுப்பூசி வீணானது.

அங்குள்ள பால்ட்டிமோர் தொழிற்சாலையில் ஜான்சன் அன்ட் ஜான்சனின் தடுப்பூசி உற்பத்தி செய்யப்படுகிறது. இது ஒரு டோஸ் மட்டும் போட வேண்டிய தடுப்பூசியாகும்.

அக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் அஸ்ட்ராஜெனெகாவின் தடுப்பூசியும் அங்கு தயாரிக்கப்பட்டு வருகிறது.

எமர்ஜென்ட் பயோசொல்யூன்ஸ் என்ற மருந்து நிறுவனம் இந்த உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிலையில், நிறுவனப் பணியாளர்கள் சிலரின் தவறால் இந்த இரண்டு தடுப்பூசிகளின் வேதிப்பொருள்களும் ஒன்றாக கலந்து விட்டதாக கூறப்படுகிறது.

இதனால் ஒன்றரை கோடி டோஸ்கள் தடுப்பூசி யாருக்கும் பயனின்றி வீணாகி விட்டதாக நியூ யார்க் டைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

## ஆஸ்திரேலிய பொருளாதார ஆலோசகரை விடுவிக்க மியன்மார் இராணுவத்தை அழைக்கிறது ஆஸ்திரேலியா



இரண்டு மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள பதவி நீக்கப்பட்ட தலைவர் ஆங் சான் சூகியின் பொருளாதார ஆலோசகரான ஆஸ்திரேலிய நாட்டவரை உடனடியாக விடுவிக்க மியன்மாரின் இராணுவத்திற்கு ஆஸ்திரேலியா இன்று வெள்ளிக்கிழமை அழைப்பு விடுத்தது.

பல ஆண்டுகளாக சூகிக்கு ஆலோசனை வழங்கிய வந்த சிட்னியில் உள்ள மேக்வாரி பல்கலைக்கழகத்தின் பொருளாதார பேராசிரியரான சீன் டர்னெல், ஒரு வாரத்திற்கு முன்பு மியன்மரின் அதிகாரப்பூர்வ ரகசியங்கள் சட்டத்தின் கீழ், சூகி மற் றும் அவரது சில அமைச்சர்களுடன் சேர்ந்து குற்றம்சாட்டப்பட்டதாக கூறப்படுகிறது.

இதை தன்னிச்சையான தடுப்புக்காவல் என்று தெரிவித்துள்ள ஆஸ்திரேலியாவின் வெளியுறவு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சகம், சீன் டர்னெல் தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தூதரகத் தொடர்புகளுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பேராசிரியர் டர்னெல் ஆஸ்திரேலியாவில் உள்ள தனது குடும்பத்துடன் மீண்டும் இணைய அனுமதிக்க இராணுவ ஆட்சியை நாங்கள் அழைக்கிறோம். எனவும் ஆஸ்திரெலியா அவரது கைது தொடர் பான உத்தியோகபூர்வ தகவல்கள் மற்றும் காரணங்களை தொடர்ந்து மியன்மாரில் ஆஸ்திரேலியாவிலுள்ள தூதரகங்களுடாக தேடிவருவதாகவும் அதேநேரம் அவரது உடனடி விடுதலையை எதிர்பாப்பதாகவும் ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் பெப்ரவரி 1 இராணுவம் சூகி அரசாங்கத்தை தூக்கியெறிந்த பின்னர் கைது செய்யப்பட்ட முதல் வெளிநாட்டவர் டர்னெல் ஆவார்.

## பிரேஸிலில் சடலம் புதைக்க இடம் இல்லை பழைய கல்லறைகளை தோண்டும் அவலம்



பிரேஸிலில் கொரோனாவால் இறந்தவர்களை அடக்கம் செய்ய இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், பழைய கல்லறைகளை சுத்தம் செய்து புதிய உடல்களை அடக்கம் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

பிரேஸிலில் தினமும் 75 ஆயிரத்திற்கு அதிகம் பேருக்கு தொற்று ஏற்பட்டு, நாளொன்றுக்கு 3 ஆயிரத்து 800 இற்கும் மேற்பட்டோர் உயிரிழக்கின்றனர்.

பிரேசிலின் மிகப்பெரிய நகரமான சாவோ பவுலோ நகரில் கொரோனாவால் இறந்தவர்களை அடக்கம் செய்ய கல்லறைத் தோட்டங்களில் இடமில்லை.

எனவே ஏற்கனவே இருக்கும் கல்லறைகளை திறந்து அவற்றில் இருக்கும் மனித எச்சங்களை அகற்றி விட்டு புதிய உடல்களை அங்கு புதைக்கின்றனர்.

## அமெரிக்காவின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த புதிய திட்டங்கள் வகுத்துள்ளதாக ஜோ பைடன் அறிவிப்பு

அமெரிக்காவில் தொற்று நோய் பாதிப்புகளை கட்டுப்படுத்த அதிபர் ஜோ பைடன் தலைமையிலான அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதே சமயம் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் அவர் பல்வேறு திட்டங்களை அறிவித்து வருகிறார்.

இந்நிலையில், அமெரிக்காவின் உள்கட்டமைப்பு மற்றும் வேலைவாய்ப்பு வசதிகளை மேம்படுத்த சுமார் 2 டிரில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் அதிபர் ஜோ பைடன் புதிய திட்டத்தை அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, பென்சில்வேனியாவின் பிட்ஸ்பர்க்கில் பேசிய போது ஜோ பைடன் கூறியதாவது:

உள்கட்டமைப்பு வசதிகள், தட்பவெப்ப மாற்றம், கொரோனாத் தொற்று போன்றவற்றால் அமெரிக்காவின் பொருளாதாரம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. அவற்றை மீண்டும் கட்டமைக்க வேண்டியது அவசியம். அதனால், உள்கட்டமைப்பு மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்த இதுவரை இல்லாத வகையில் 2 டிரில்லி



யன் டொலர்கள் முதலீடு செய்யும் திட்டத்தை தொடங்கியுள்ளேன். உலகின் மிகப்பெரிய பொருளாதார சக்திமிக்க நாடாக, அமெரிக்கா தொடர வேண்டும் என்பது தான் என் விருப்பம்.

இந்த திட்டத்தின் மூலம் அமெரிக்காவில் வேலைவாய்ப்புகள், வரலாற்றில் இல்லாத வகையில் அதிகரிக்கும். பொருளாதாரமும் மாபெரும் வளர்ச்சி பெறும். இரண்டாம் உலகப் போர் முடிந்த பின், அமெரிக்காவில் வேலை வாய்ப்புகளை உருவாக்க அதிக முதலீடு செய்யப்பட்டது. அதன்பின், தற்போது தான் வேலை வாய்ப்பு மற்றும் உள்கட்டமைப்புக்காக அதிக முதலீடு செய்யப்படுகிறது என தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு கெவிளியமடுவில் காணி அபகரிக்க ரகசிய முயற்சி

**நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றச்சாட்டு**



**ந.லோகதயாளன்.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் கிராமத்திற்கு அண்டிய வனப் பகுதியில் சிங்கள மக்களை குடியேற்றும் நோக்கிலேயே முந்திரிச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவே சந்தேகம் எழுகின்றது என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கெவளியமடு பிரதேசத்தில் உள்ள வன வளத் திணைக்களத்தின் ஆளுகையில் உள்ள இடத்தில் சிங்களக் குடியேற்றத்தை ஆரம்பிக்கும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது. இதற்காக மர முந்திரி பயிர்ச் செய்கையை சிவில் பாதுகாப்பு திணைக்களம் ஆரம்பித்திருக்கின்றது.

இவ்வாறு மர முந்திரிகை மேற்கொண்டிருக்கின்ற இடங்களை அண்டி விரைவில் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்படலாம் என மக்களால் அஞ்சப்படும் சூழலில் அதனை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். இதனையடுத்து சக நாடாளுமன்ற உறுப்பினர்களான இ.சாணக்கியன், கோ.கருணாகரன் ஆகியோருடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ப.அரியநேந்திரன் உட்பட பலர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது அங்கே வனவளத் திணைக்களத்தின் ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் மர முந்திரிகை செய்கையில் ஈடுபடும் சிவில் பாதுகாப்பு படை வீரர்களின் பெயரில் நிலங்கள் பிரித்து வழங்கப்பட்டுள்ளபோதும் எந்தவொரு அனுமதியினையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை. இதனால். அவர்களது குடும்பத்தவர்களிற்கு அந்த நிலங்கள் வழங்குவதற்கான ஏற்பாடாகவே தெரிகின்றது.

இதனால் அப்பகுதி மக்களின் நியாயமான அச்சம் தொடர்பில் அடுத்து மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து தீர்மானிக்கவுள்ளோம் என்றார்.

# புனித வெள்ளி திருச்சிலுவைப்பாதை வழிபாடு



மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தின் வருடாந்த திருச்சிலுவைப் பாதை திருப்பவணி நிகழ்வு பேராலய பங்குத் தந்தை அருட்பணி ஜோர்ஜ் ஜீவராஜ் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இயேசுவின் திருப்பாடுகளை வெளிப்படுத்தும் நாற்பது நாள்கள் கொண்ட தவக்கால வழிபாட்டின் இறுதி நாளான இன்று புனித வெள்ளிக்கிழமை விசேட வழிபாட்டு நிகழ்வாக இச் சிலுவைப்பாதை திருப்பவனி இடம்பெற்றது.

தேவாலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட இச் சிலுவைப் பாதை பவனியானது புளியந்தீவின் பல பாதைகளினூடாக வருகை தந்து மீண்டும் ஆலயத்தில் நிறைவடைந்தது. இதன் போது பதின்நான்கு ஸ்தலங்களில் இயேசு கிறிஸ்துவின் பாடுகளின் தியானங்கள், சிந்தனைகள், செபங்கள் மூலம் பக்தி பூர்வமாக வழிபாடுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# காடழிப்புடன் கூடிய சட்டவிரோத குடியேற்றம் இம்ரான் மஹ்ரூப் எம்.பி. பார்வையிட்டார்



கிண்ணியா,ஏப்ரல் 2

கிண்ணியா எல்லைப்பிரதேசத்தில் இடம்பெறும் காடழிப்புடன் கூடிய சட்டவிரோதக் குடியேற்றமும் கிண்ணியாவில் எல்லையை அடையாளப்படுத்த வேண்டிய அவசியமம் ஏற்பட்டுள்ளதாகக் காடுகளை அழித்து மீள்குடியேற்றம் நடைபெறுவதாக அறிந்து அப்பகுதிக்கு பொது மக்கள் சகிதம் சென்ற திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் பார்வையிட்டார்.

கிண்ணியா பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட ஆயிலடி, மஜீத் நகர் கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட செம்பிமோட்டை இரட்டைக்குளம்,சுண்டியாறு, புளியங்குளத்தை அண்டிய பிரதேசம் ,வாழைமடு போன்ற பிரதேசங்களில் கிண்ணியா பிரதேச மக்கள் 50 வருடங்களுக்கு மேலாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

1980 களில் ஏற்பட்ட யுத்தநிலையினால் தமது விவசாயக் காணிகளை கைவிட்டு வந்த இம்மக்கள் படிப்படியாக தமது காணிகளில் குடியேறி விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் இந்நேரத்தில்

கடந்த வாரம் இந்த பிரதேசத்துக்கு எந்தவகையிலும் சம்பந்தமில்லாத ஆயிரக்கணக்கான சிங்கள மக்கள் சில பௌத்த தேரர்களின் தலைமையில் கனரக வாகனங்கள், டோசர்களை பயன்படுத்தி காடுகளை அழித்து கூடாரங்களை அமைத்து குடியேற முயற்சித்தவேளை அவ்விடத்தில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பின்னர் அவ்விடத்துக்கு வந்த முப்படையினர் வனவிலங்கு அதிகாரிகளின் தலையீட்டால் அவர்கள் கலைந்து சென்றாலும் மீண்டும் வருவார்கள் என்ற அச்சநிலை மக்களிடத்தில் நிலவுகிறது.

இந்நிலை தொடர்பாக ஆராய திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் நேற்று வியாழக்கிழமை குறிப்பிட்ட பிரதேசத்துக்கு நேரடியாக விஜயம் செய்த பின்னர் இந்த இடத்துக்கு கிண்ணியா பிரதேச செயலாளர், காணி உத்தியோகத்தர் உள்ளிட்ட குழுவினரையும் அழைத்து இந்த சட்டவிரோத குடியேற்ற முயற்சி சம்மந்தமாக அவ்விடத்தில் மாவட்ட செயலாளருடன் தொலைபேசி மூலம் உரையாடி இதை நிரந்தரமாக தடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் கிண்ணியாவில் எல்லையை அடையாளப்படுத்த எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பாக தொடர்ந்தும் அவதானத்துடன் இருப்போம் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்துள்ளார்.

# சிறுபோக நெற்செய்கைக்கான தயார் நிலை

சிறுபோகத்துக்கான நெற்செய்கை இடம் பெறவுள்ள நிலையில் தற்போது நெல் விதைப்பதற்கான வயல் நிலங்களை உழும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள முள்ளிப்பொத்தானை உள்ளிட்ட பல வயல் நிலப் பகுதிகள் நெற் செய்கைக்கான தயார்படுத்தலில் விவசாயிகள் உள்ளார்கள்.

இதன் ஊடாக தற்போது நெல் விதைப்பினை மேற்கொள்ள இயந்திரம் மூலமாக வயல் நிலங்களை சரிபடுத்தி வருவதனை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

இம் முறை விவசாய நெற் செய்கை காரணமாக அதிக விளைச்சல் கிடைக்கலாம் எனவும் நெல்லுக்கான உத்தரவாத விலை கிடைக்கப் பெறலாம் எனவும் விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

# இறுதிப் போட்டியில் நியூஸ்டார் வெற்றி




ஓட்டமாவடி,ஏப்ரல் 2

ஓட்டமாவடி உதைப்பந்தாட்ட சம்மேளம் நடாத்திய பத்து அணிகள் பங்குபற்றிய உதைப்பந்தாட்ட சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று வியாழக்கிழமை ஓட்டமாவடி அமீர் அலி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இச் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியில் வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த நியூ ஸ்டார் மற்றும் அல் – அக்ஸா ஆகிய இரு அணிகள் கலந்து கொண்டன.

இவ் இறுதிப் போட்டியில் வாழைச்சேனை நியூஸ்டார் அணி 3 – 0 எனும் கோல் கணக்கில் அல் அக்ஸாவை வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இந்நிகழ்வில் அதிதிகளாக இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளன பொதுச் செயலாளர் ஜெஸ்வர் உமர், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும் மட்டக்களப்பு உதைபந்தாட்ட சம்மேளன தலைவருமான மா உதயகுமார், வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன மற்றும் முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு வெற்றிபெற்ற அணிக்கும் சிறந்த வீரர்களுக்கும் வெற்றிக் கிண்ணங்களை வழங்கி வைத்தனர்.

# பாதுகாப்பின் மத்தியில் சியோன் தேவாலயத்தில் திருப்பாடுகளின் பெரிய வெள்ளி விசேட ஆராதனை





**(கல்லடி நிருபர்)**

இயேசுபிரான் சிலுவையில் அறையப்பட்டதை நினைவுகூறும் திருப்பாடுகளின் பெரிய வெள்ளி விசேட ஆராதனைகள் மட்டக்களப்பு மாவட்டம் பூராகவும் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் இன்று இடம் பெற்றது. இதனை முன்னிட்டு பாதுகாப்பிற்கு மத்தியில் இன்று மட்டக்களப்பு சியோன் தேவாலயத்திலும் விசேட ஆராதனைகள் இடம்பெற்றன.

சியோன் தேவாலயத்தின் பிரதம போதகர் றொசான் மகேசன் தலைமையில் இடம் பெற்ற திருப்பாடுகளை நினைவு கூறும் விசேட ஆராதனைகள் சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்றாற்போல் மிகச் சிறப்பான ஒழுங்குபடுத்தலுடன் இடம்பெற்றது.

அதிகளவிலான இறைவிசுவாசிகளின் பங்கேற்புடன் ஆரம்பமான ஆராதனையில் இயேசுவின் திருப்பாடுகளை பறைசாற்றி நிற்கும் திருப்பாடல்கள் இசைக்கப்பட்டதனைத் தொடர்ந்து, பிரதம போதகரின் பிரசங்கத்தை தொடர்ந்து விசேட ஆராதனைகள் நிறைவடைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2 ஆவது டெஸ்ட் இறுதிநாள் ஆட்டம் இலங்கை அணிக்கு வெற்றி இலக்கு 348

இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாள் ஆட்டநேர முடிவில், இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை அணி விக்கெட் இழப்பின்றி 29 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. லஹிரு திரிமன்னே 17 ஓட்டங்களுடனும் திமுத் கருணாரத்ன 11 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இலங்கை அணி 348 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது.

அன்டிகுவா மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இப்போட்டியில் முதலில் தமது முதலாவது இன்னிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 354, இலங்கை அணி 258 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டன.

இதனைத்தொடர்ந்து 96 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்திய தீவுகள் அணி, 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 280 ஓட்டங்களை பெற்றிருந்த போது தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

பிரத்வெய்ட் 85 ஓட்டங்களையும் ஹோல்டர் ஆட்டமிழக்காது 71 ஓட்டங்களையும் மேயர்ஸ் 55 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். சுரங்க லக்மால் மற்றும் துஷ்மந்த சமீர ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இலங்கை அணிக்கு 377 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

10 விக்கெட்டுக்கள் மற்றும் ஒருநாள் மீதமிருக்க இன்னும் 348 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் இலங்கை அணி இன்று களமிறங்கவுள்ளது.

# மியாமி ஓபின் டென்னிஸ் காலிறுதி முடிவுகள்



மியாமி ஓபின் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியில் றொபர்டோ படிஸ்டா அகுட் மற்றும் ஜெனிக் சின்னர் ஆகியோர் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியொன்றில், ஸ்பெயினின் றொபர்டோ படிஸ்டா அகுட், ரஷ்யாவின் டேனில் மெட்வடேவை எதிர்கொண்டார்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், றொபர்டோ படிஸ்டா அகுட், 6 - 4, 6 - 2 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியொன்றில், இத்தாலியின் ஜெனிக் சின்னர் கஸகஸ்தானின் அலெக்சாண்டர் பப்ளிக்குடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், 7 - 6, 6 - 4 என்ற நேர் செட் கணக்குகளில் ஜெனிக் சின்னர் வெற்றிபெற்று அரையிறுதிக்குள் நுழைந்தார்.

பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியொன்றில் கனடாவின் பியான்கா அன்ரெஸ்க்கும் ஸ்பெயினின் சாரா சொரிப்ஸ் டர்மோவும் பலப்பரீட்சை நடத்தினர்.

எதிர்பார்ப்பு மிக்க இப்போட்டியில், பியான்கா அன்ரெஸ்க் 6 - 4, 3 - 6, 6 - 3 என்ற செட் கணக்குகளில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு அடியெடுத்து வைத்துள்ளார்.

# ஆஸி - நியூஸி மகளிர் கிரிக்கெட் தொடர் சமநிலையில் முடிவு



ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து மகளிர் அணி முதலில் 3 ஆட்டங்கள் கொண்ட இருபதுக்கு இருபது தொடரில் விளையாடியது. தலா ஒரு போட்டியில் இரு அணிகளும் வெற்றிபெற்றிருந்த நிலையில் கடைசிப் போட்டி நேற்று ஓக்லாண்டில் நடைபெறுவதாக இருந்தது. மழை காரணமாக அந்தப் போட்டி ஆரம்பித்து மூன்றாவது ஓவர் வீசப்பட்ட நிலையில் கைவிடப்பட்டது. தொடரை 1-1 என்ற கணக்கில் சமன் செய்ததால் கோப்பையை இரு அணிகளும் பகிர்ந்துகொண்டன.

இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச போட்டித்தொடர் 4ஆம் திகதி ஆரம்பமாகிறது.

# 'யோ - யோ' சோதனை தேவையற்ற ஆணி முன்னாள் வீரர் சேவாக் கருத்து!



'கிரிக்கெட் வீரர்களின் திறனை 'யோ - யோ' சோதனையைவைத்து முடிவுசெய்யக்கூடாது. மற்ற திறமைகளின் அடிப்படையில் வீரர்களுக்கு வாய்ப்புத் தர வேண்டும். எங்கள் காலத்தில் 'யோ - யோ' சோதனை இருந்திருந்தால் சவுரவ் கங்குலி, வி.வி.எஸ்.லட்சுமணன் போன்றவர்கள்கூட தேர்ச்சி பெற்று இருக்க மாட்டார்கள்' என்று முன்னாள் வீரர் வீரேந்திர சேவாக் விளையாட்டுத் துறை ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் கூறியுள்ளார்.

தமிழக வீரர் வருண் சக்கரவர்த்தி அபாரமான திறமை கொண்டவராக இருந்தும் 'யோ - யோ' சோதனையில் வெற்றி பெறாததால் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால், மேற்கிந்தியத் தீவுகள் அணியில் உள்ள ரகீம் கோர்ன்வாலின் எடை 140 கிலோ. இருந்தும் துடுப்பாட்டம், பந்து வீச்சு இரண்டிலும் கலக்குகிறார். அவருக்கு இந்தச் சோதனை வைத்திருந்தால் என்னவாகியிருக்கும்? என்று சேவாக்கின் கருத்துக்கு ஆதரவாக பலரும் தங்கள் பின்னூட்டங்களைப் பகிர்ந்துவருகிறார்கள்.

அதே நேரம், 'விராட் கோலி தலைவராக ஆனபிறகு இந்திய வீரர்களின் உடற்திறன் மேம்பட்டுள்ளது. அவர் வருவதற்கு முன்பு வீரர்களின் உடலில் உள்ள கொழுப்பு சதவீதம் குறித்து யாரும் பேசியதில்லை. அந்த அளவுக்கு வீரர்களின் பயிற்சி மற்றும் சாப்பிடும் முறையை விராட் மாற்றியுள்ளார்' என்று வேகப்பந்து வீச்சாளரான இஷாந்த் சர்மா புகழ்ந்துள்ளார்.

# இருபதுக்கு இருபது தொடரிலும் பங்களாதேஷ் படுதோல்வி!



பங்களாதேஷ் அணிக்கெதிரான இருபதுக்கு இருபது கிரிக்கெட் தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டியில், நியூஸிலாந்து அணி டக்வத் லூயிஸ் முறையில் 65 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரையும் 3 - 0 என்று கைப்பற்றியுள்ளது.

ஒக்லாண்ட் மைதானத்தில் நேற்று நடைபெற்ற மூன்றாவது போட்டியில் மழை குறுக்கிட்டதால் போட்டி அணிக்கு தலா 10 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட நியூஸிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பிஃன் அலென் 71 ஓட்டங்களையும் மார்ட்டின் கப்டில் 44 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தஸ்கின் அஹ்மட், சொரிபுல் இஸ்லாம், மெஹதி ஹசன் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

பதிலுக்கு 142 என்ற வெற்றி இலக்கை நோக்கிக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 9.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் 76 ஓட்டங்களுக்கு இழக்க, நியூஸிலாந்து அணி டக்வத் லூயிஸ் முறைப்படி 65 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

டொட் அஸ்ட்டில் 4, டிம் சவுத்தி 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 29 பந்துகளில் 71 ஓட்டங்களை விளாசிய பிஃன் அலெனும் தொடரின் நாயகனாக க்ளென் பிலிப்ஸும் தெரிவானார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளிகளின் பௌதீக பற்றாக்குறை பிரச்சினைகளுக்கு மிக விரைவில் தீர்வு

## என்கிறார் வியாழேந்திரன்





மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முன்பள்ளிகளின் பௌதீக வளப்பற்றாக்குறை மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சம்பளப் பிரச்சினை உட்பட பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என முன்பள்ளி இராஜாங்க அமைச்சர் றியால் நிசாந்த டி சில்வா உறுதியளித்துள்ளார் என இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வி அபிவிருத்தி தொடர்பாக அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் அழைப்பின் பேரில் முன்பள்ளி இராஜாங்க அமைச்சர் றியால் நிசாந்த டி சில்வா மட்டக்களப்பிற்கு கடந்த வெள்ளிக்கிழமை விஜயம் ஒன்றை மேற்கொண்டு முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் வின்சன்ட் தேசிய பாடசாலை கல்வி சமூகத்தினருடனான சந்திப்பின் போது இராஜாங்க அமைச்சர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

வின்சன்ட் தேசிய பாடசாலைக்கு அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் சகிதம் இராஜாங்க அமைச்சர் றியால் நிசாந்த டி சில்வா விஜயம் மேற்கொண்டு பாடசாலை கல்வி சமூகத்தினருடனான கலந்துரையாடலில் அந்த பாடசாலையின் பௌதீகவள பற்றாக்குறைகளான கட்டடவசதி, விஞ்ஞான ஆய்வுகூடவசதி, கணிணி அறை மற்றும் ஆரம்பக்கல்வி கட்டடம் முடிவு பெறாத நிலையில் இருக்கின்றது போன்ற பல்வேறு தேவைகள் தொடர்பாக பாடசாலை சமூகம் எழுத்துமூலம் கோரிக்கையை அமைச்சரிடம் முன்வைத்துள்ளது.

எனவே இராஜாங்க அமைச்சரின் செயலாளர் பாடசாலையின் பௌதீக வளப்பற்றாக்குறை மற்றும் தேவைகளை பூர்த்தி செய்து தருவதாக உறுதிமொழியளித்துள்ளார்.

அதேவேளை முன்பள்ளி ஆசிரியர்களுடனான சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் –

மட்டக்களப்பு மாவட்டத்தின் 900 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள், 533 முன்பள்ளி பாடசாலைகளில், இதில் பதிவு செய்யப்படாத முன்பள்ளி ஆசிரியர்கள் உட்பட 1,300 இற்கு மேற்பட்டோர் உள்ளனர். இவர்களது சம்பளப் பிரச்சினை தொடக்கம் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கிக் கொண்டுள்ளனர். இவர்களுடைய மாதாந்த சம்பளம் 4 ஆயிரம் ரூபா என்பது அவர்களுடைய உடைகளுக்கே போதாது.

கடந்த ஆட்சிக்காலத்திலே முன்பள்ளி தொடர்பாகவும் ஆசிரியர்கள் தொடர்பாகவும் அவர்களுடைய கற்றல், கற்பித்தல் மற்றும் பௌதீக பற்றாக்குறை தொடர்பாக கடந்த அரசாங்கத்தில் எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. குழந்தைகளின் கல்வி பரிதாபம். முன்பள்ளி கல்வியே முக்கியமானது. ஆகவே முன்பள்ளியை கவனமெடுக்கவேண்டும்.

தற்போது ஜனாதிபதி நாட்டை சுபீட்சத்தை நோக்கி கட்டியெழுப்பும் நோக்கத்துக்கு அமைய முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஓர் இராஜாங்க அமைச்சு இருக்கின்ற அதேவேளை பஸில் ராஜபக்ஷ முன்பள்ளிகளைப் பலப்படுத்த இன்னும் பல திட்டங்களை வகுத்து கொடுத்துள்ளார்.

எனவே இந்த முன்பள்ளிகளின் பௌதீகவள குறைபாடுகள் மிக விரைவில் நிவர்த்தி செய்து தீர்க்கப்படும் என முன்பள்ளிகள் இராஜாங்க அமைச்சர் உறுதியளித்துள்ளார் என அவர் தெரிவித்தார்.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர சம்பளம் வழங்கல்

## நாமல் ஏற்பாடு



முன்பள்ளியில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நிரந்தர சம்பளம் ஒன்றை வழங்கும் செயற்பாட்டை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தவிடயம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஒன்று கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸால் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அது விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கிராமிய பொருளாதார மேம்பாட்டுத் தேசிய வேலைத் திட்டத்தின் சமூக அபிவிருத்தி உட்கட்டமைப்பு தொடர்பான கலந்துரையாடல் நேற்று (வியாழக்கிழமை) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

மேலும் மாவட்டத்தில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாகக் கருத்துகளைத் தெரிவிக்கும் உரிமை மக்கள் பிரதிநிதிகளுக்கு இல்லை என்ற குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்த அவர், எதிர்வரும் காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

எதிர்வரும் மே மாதம் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர், யுவதிகளின் நன்மை கருதி இலங்கையில் உள்ள நிறுவனங்கள் மற்றும் அரச திணைக்களங்களை ஒருங்கிணைத்து மாபெரும் தொழிற்சந்தை ஒன்றை நடத்தவுள்ளதாகவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

# அமைச்சர் நாமல் உள்ளிட்ட நால்வருக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத் தடை நீக்கம்

நிதி மோசடி சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உட்பட நால்வருக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுபயணத்தடை நீக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக உழைக்கப்பட்ட ஒரு கோடியே 50 லட்சம் ரூபா நிதி முதலீடு தொடர்பான வழக்கு விசாரணையின்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# மக்கள்மீது மனிதாபிமானத்துடனேயே பொலிஸார் நடந்துகொள்ளவேண்டும்

## இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க அறிவுறுத்தல்

சட்டத்தை மீறுபவர்களை கைது செய்து அபராதம் விதிப்பது பொலிஸாரின் ஒரே கடமை அல்ல என இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொலிஸ் துறையிலும் தவறிழைக்கும் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அநுராதபுரத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், மக்களுடன் பழகும்போது பொலிஸார் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பல்வேறு குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்களைபுனர்வாழ்வுஅளிப்பதோடு, குற்றங்களைத் தடுப்பதற்கான முயற்சிகளைத் தொடரவும் அவர் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

# சீன ‘சினோ போம்’ தடுப்பூசி பயன்பாட்டுக்கு ஆபத்து!

## ராஜித சேனாரத்ன எச்சரிக்கை



சீனாவின் தயாரிப்பான கொவிட்–19 வைரஸுக்கு எதிரான சினோபோம் தடுப்பூசியை பயன்படுத்துவதற்கு மருத்துவ உத்தரவாதம் இல்லை என முன்னாள் சுகாதார அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த தடுப்பூசியின் பயன்பாடு மிகவும் ஆபத்தானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில், நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் ராஜித சேனாரத்ன மேலும் கூறியுள்ளவை வருமாறு – ‘இலங்கை தேசியமருந்துஒழுங்குமுறைஆணையகம், சினோபோம் தடுப்பூசியை பயன்படுத்த அனுமதி வழங்கவில்லை.

மேலும் சீன உற்பத்தியாளர், தடுப்பூசி குறித்த எந்த தகவலையும் வழங்கவில்லை. இந்நிலையில் இந்த தடுப்பூசிக்கு அரசியல் ஒப்புதல் மாத்திரம் இருக்கின்றது. இதேவேளை சிறப்பு மருத்துவர்களைக் கொண்ட நிபுணர் குழுவுக்கு பதிலாக அமைச்சர் சன்ன ஜெயசுமனவுக்கு விசுவாசமானவர்கள் தேசியமருந்துஒழுங்குமுறைஆணையத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். – என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கொரோனாத் தடுப்பூசி ஏற்றல் தற்காலிகமாக இடைநிறுத்தம்!

கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த 31ஆம் திகதி முதல் குறித்த நடவடிக்கை இவ்வாறு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கொரோனா கட்டுப்பாடு தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்னி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

அஸ்ராஜெனெ கொரோனா தடுப்பூசி ஏற்றுமதியை இந்திய அரசாங்கம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது. இதன்காரணமாகவே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், அஸ்ராஜெனெ கொரோனாத் தடுப்பூசியை இம்மாத இறுதியில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



அஸ்ராஜெனெ கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸினைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு செலுத்துவதற்காக 2 லட்சத்து 36 ஆயிரம் தடுப்பூசிகள் எஞ்சியுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# எந்த தடுப்பூசி வழங்கல் தொடர்பிலும் முடிவெடுப்பவர் ஜனாதிபதி அல்லர்

## ராஜித தெரிவிப்பு

எந்த தடுப்பூசிகளை பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் என்பதை ஜனாதிபதி தீர்மானிக்கக் கூடாது என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சினோபோர்ம் தடுப்பூசியின் பயன்பாடு தொடர்பாகக் கருத்து தெரிவித்த அவர் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவும் தடுப்பூசிகளையும் ஆய்வுசெய்யும் நிபுணர்கள் குழுவும் குறித்த தடுப்பூசி ஏற்றதல்ல என முடிவு செய்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டினார்.

சீனத் தடுப்பூசி தொடர்பாகப் போதுமான தகவல்கள் இல்லை என்ற அதேவேளை அதிகாரிகள் இது பயன்பாட்டுக்கு ஏற்றதல்ல என்று கூறியுள்ள நிலையில் நமது ஜனாதிபதி ஏன் இத்தகைய தடுப்பூசிகளை இறக்குமதிசெய்கிறார் என்றும் கேள்வியெழுப்பினார்.

மியன்மாரில் கூட, மக்களுக்கு எந்த தடுப்பூசி கொடுக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பவர் ஜனாதிபதி அல்லர் என்றும் ராஜித சேனாரத்ன சுட்டிக்காட்டினார்.

தடுப்பூசி நன்கொடையாக வழங்கப்பட்டதால் அவசரகால பயன்பாட்டுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்ட அவர், யாராவது எங்களுக்கு இலவசமாக விஷத்தை அனுப்பினால், அதைப் பயன்படுத்துவோமா என்றும் கேள்வியெழுப்பினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org